# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

**CC . No . 21/2016 L.W.6 P.W.6**

Name : காப்பிய செல்வம் ( பட்டியலில் காப்பி செல்வம் என உள்ளது)
Caste :
Father/Husband Name : ராஜேந்திரன் Calling :
Village : சின்னகொசப்பள்ளம் Religion :
Taluk : திட்டக்குடி Age : 40
District : கடலூர்

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 02.03.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

***1 முதல் 7 மற்றும் 9 முதல் 13 வரை எதிரிகள் ஆஜர், எதிரிகளில் 12 வது எதிரி ஆஜரில்லை. மனுவின் பேரில் பிடியாணை ரத்துசெய்யப்பட்டது. 8 வது எதிரி ஆஜரில்லை கு.வி.மு.பிரிவு 317 ன் கீழ்மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் சின்னகொசப்பள்ளத்தில் குடும்பத்துடன் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் அ.சா.5 மற்றும் பட்டியல் சாட்சிகள், ஆஜர் எதிரிகள் 1 முதல் 11, 13 மற்றும் 12 வது எதிரி அன்பரசன் ஆகிய எல்லோரையும் தெரியும். (அன்பரசன் ஆஜரில்லை மருத்துவ காரணங்களால் மனு அனுமதிக்க்பட்டு பிடியாணை ரத்துசெய்யப்பட்டது. ) எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. தற்போது நான் சமூகம் நீதிமன்றத்தின் அழைப்பாணையை பெற்று சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 30–108–2014 ம் தேதி நானும், நானும், அ.சா.4 சின்னதுரை, பட்டியல் சாட்சி 7 செல்வமணி எல்லோரும் அ.சா.1 பிரபாகரன் வீட்டிற்கு பக்கத்தில் நின்றுகொண்டிருந்ததாகவும், அ.சா.2 சிவநாதனும், அ.சா.5 ம் மாலை 6.00 மணிக்கு அவர்களுடைய வீடிற்கு வந்துகொண்டிருந்ததாகவும், அ.சா.1 பிரபாகரன் வீட்டிற்கு முன்னால் ஆஜர் எதீகளில் கிருஷ்ணமூர்த்தியின் மகன்கள் வெங்கடேசனும், பாலசுப்பரமணியனும் மற்ற ஆஜர் எதிரிகளும், எதிரி அன்பரசனும் அ.சா.2, அ.சா.5 ஐ பார்த்து காமகுரோதமான வார்த்தைகளால்திட்டி கல்லால் அ.சா.5 ன் வயிற்றில் அடித்து அ.சா.5 ன் அண்ணனை கட்டை மற்றும் கழியால் இடது காலில் அடித்து அ.சா.3, அ.சா.4 மற்றும் நான் வந்தவுடன் ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி அ.சா.2, அ.சா.5 ஐயும் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், பின்னா அ.சா.2, அ.சா.5 ஐ யும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அசா.1 பிரபாகரன் புகார் கொடுத்ததாகவும்,

சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலிஸார் வந்து விசாரித்போது ஆஜர் எதிரிகள், எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்லை.

**1 முதல் 7 எதிரிகள் மற்றும் 9 முதல் 10, 13 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC . No . 21/2016 L.W.5 P.W.5**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவானந்தன் | Caste | : |
| Father/Husband Name | : திராவிடமணி | Calling | : |
| Village | : சின்னகொசப்பள்ளம் | Religion | : |
| Taluk | : திட்டக்குடி | Age | : 28 |
| District | : கடலூர் | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 02.03.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

***1 முதல் 7 மற்றும் 9 முதல் 13 வரை எதிரிகள் ஆஜர், எதிரிகளில் 12 வது எதிரி ஆஜரில்லை. மனுவின் பேரில் பிடியாணை ரத்துசெய்யப்பட்டது. 8 வது எதிரி ஆஜரில்லை கு.வி.மு.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1. நான் சின்னகொசப்பள்ளத்தில் குடும்பத்துடன் வசித்து கட்டிட தொழிலாளியாக வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 பிரபாகரன் பங்காளி, அ.சா.2 சிவதிருநாதன் எனது சொந்த அண்ணன் ஆவார். அ.சா.3, அ.சா.4 மற்றும் பட்டியல் சாட்சிகள், ஆஜர் எதிரிகள் 1 முதல் 11, 13 மற்றும் 12 வது எதிரி அன்பரசன் ஆகிய எல்லோரையும் தெரியும். (அன்பரசன் ஆஜரில்லை மருத்துவ காரணங்களால் மனு அனுமதிக்க்பட்டு பிடியாணை ரத்துசெய்யப்பட்டது. ) கடந்த 2013 அல்லது 2014 ம் வரூடம் எனக்கு உடம்பில் சில நபர்களால் காயங்கள் ஏற்பட்டது. தற்போது உடம்பில் எங்கு காயங்கள் என்று நினைவில்லை. என்னை இந்த வழக்குசம்மந்தமாக போலிஸார் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 30–108–2014 ம் தேதி நானும், என் அண்ணன் அ.சா.2 சிவநாதனும் மாலை 6.00 மணிக்கு வீட்டிற்கு வந்துகொண்டிருந்ததாகவும், அ.சா.1 பிரபாகரன் வீட்டிற்கு முன்னால் ஆஜர் எதிகளில் கிருஷ்ணமூர்த்தியின் மகன்கள் வெங்கடேசனும், பாலசுப்பரமணியனும் மற்ற ஆஜர் எதிரிகளும், எதிரி அன்பரசனும் ஏ்ங்களை பார்த்த காமகுரோதமான வார்த்தைகளால்திட்டி கல்லால் எனது வயிற்றில் அடித்து என் அண்ணனை கட்டை மற்றும் கழியால் இடது காலில் அடித்து அ.சா.3,அ.சா.4 மற்றும் பட்டியல் சாட்சிகள் வந்தவுடன் ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி எங்களை கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், பின்னா ் என்னையும், எனது அண்ணனையும் மருத்துவமனையில சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அசா.1 பிரபாகரன் புகார் கொடுத்ததாகவும், போலிஸார் வந்து விசாரித்போது ஆஜர் எதிரிகள், எதிரி என்னையும்,எனது அண்ணனையும தாக்கி

காயம் ஏற்படுத்தியது பற்றி சொல்லவிட்டு தற்போது நான் ஆஜர் எதிரிகள், எதிரியுடன் சமாதானம் ஆகி எதிரிகளுடன் நன்றாக பேசி, பழகி வருவதால் தனக்கு ஏற்பட்ட காயத்தை மறைத்து உண்மைக்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியில்ல.

**1 முதல் 7 எதிரிகள் மற்றும் 9 முதல் 10, 13 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**